**SAVINGS**

AIA SAVINGS PLAN

# உங்கள் கனவுகளை நனவாக்க ஓர் சேமிப்பு திட்டம்



HEALTHIER, LONGER, BETTER LIVES

aialife.com.lk

நம் அனைவருக்கும் கனவுகளும், அபிலாஷைகளும் உள்ளன. இவற்றை அடைவதற்கென ஆகக்கூடிய வருமானத்தைப் பெறும் நோக்கில் பாரம்பரிய சேமிப்பு முறைகளான வங்கி சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புக்கள் போன்றவற்றிற்கு நாம் முன்னுரிமை கொடுப்பினும், முதலீடு செய்யப்பட்ட பணத்திற்கு இவை சிறந்த மீள்கொடுப்பனவு முறையாக அமைவதில்லை. ஆனால், திறைசேரி உண்டியல்கள் முதல் பங்குச்சந்தை வரை உள்ள முதலீட்டு வழிமுறைகளைக் கொண்ட சேமிப்புத் திட்டம் ஒன்றை வழங்கின் உங்கள் தெரிவு யாதாயிருக்கும்?
AIA SavingsPlan இத்தகையதொரு சேமிப்புத் திட்டமாகும்.

உங்கள் முதலீடுகளில் இருந்து ஆகக்கூடுதல் மீள்கொடுப்பனவைப் பெறுவதோடு, உங்களுக்கு மிகவும் பொருத்தமான சிறந்த முதலீட்டுத்திட்டம் ஒன்றைத் தெரிவுசெய்வதற்கும் AIA SavingsPlan வாய்ப்பளிக்கின்றது. பல தரப்பட்ட காப்புறுதி அனுகூலங்கள் கிடைப்பது இதன் மற்றொரு தனித்துவமாகும்.

AIA SavingsPlan சேமிப்புத் திட்டத்தின் மூலம் சிறந்த முதலீட்டு வாய்ப்புக்களையும் காப்புறுதி அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

## உங்கள் சேமிப்புத் திட்டத்தின் தனித்துவம் யாது?

- உங்களது சேமிப்பு நிதியத்தை, திறைசேரி உண்டியல்கள் முதல் பங்குச்சந்தை வரை முதலீடு செய்வதற்கான நான்கு முதலீட்டுத் திட்டங்கள் உள்ளன. Cautious, Moderate, Aggressive மற்றும் Advanced என்பனவே அவையாகும்.

- காப்புறுதி ஒப்பந்தத்தின், மூன்றாவது ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஒவ்வொரு காப்புறுதி வருட ஆரம்பத்திலும் ஆகக்கூடுதலாக நிதியப் பெறுமதியின் 10% வரை நீங்கள் மீளப்பெறும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

- உங்கள் சேமிப்புகளுக்கு பணவீக்கத்தில் இருந்து பாதுகாப்பு.

- தற்போதைய சேமிப்பு நிதியத்தை உச்சக்கட்டத்திற்குக் கொண்டுசெல்லும் ஆற்றல்.

- உங்கள் சேமிப்பு அனுகூலத்தை ஆகக்கூடிய மட்டத்திற்குக் கொண்டுவரும் வகையில் முதிர்வுப் பெறுமதிக்கு வரிவிலக்கு.

- உங்களுக்குப் பொருத்தமான ஆயுள் காப்புறுதி.

- பாரதூரமான நோய், வைத்தியசாலையில் தங்கியிருத்தல், சத்திர சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் பிள்ளைகளுக்கும் வைத்திய மற்றும் பாதுகாப்பு அனுகூலங்களிற்கான தெரிவு.

- உங்கள் குடும்ப மாதாந்த வருமானத்தைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பு.

## உங்களது நிதியத்தை அதிகரிப்பதற்கான முதலீட்டுத் தெரிவுகள்

காப்புறுதித் திட்ட ஆரம்பத்தில் கீழ்க்காணும் நான்கு முதலீட்டு திட்டங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு உங்களுக்குண்டு.

| முதலீட்டுத் திட்டங்கள் | Growth நிதியத்தில், கட்டுப்பணம் செலுத்தும் காலம்%ல் | Balanced நிதியத்தில், கட்டுப்பணம் செலுத்தும் காலம்%ல் | Secure நிதியத்தில், கட்டுப்பணம் செலுத்தும் காலம்%ல் |
|---|---|---|---|
| Cautious | 25% | 55% | 20% |
| Moderate | 40% | 40% | 20% |
| Aggressive | 65% | 20% | 15% |
| Advanced | எப்போது, எவ்வாறு முதலீடு செய்வது, மாற்றுவது என்பதனை நீங்களே தீர்மானிக்கலாம் | | |

Cautious, Moderate மற்றும் Aggressive முதலீட்டுத் திட்டங்களில் மேலே குறிப்பிடப்பட்ட நிதித் தெரிவுகளில் ஒவ்வொன்றிலும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட முதலீட்டு காலத்தின் அடிப்படையில் உங்களது பணம் முதலீடு செய்யப்படும்.

*உதாரணம், 20 வருடகால தவணையில் நீங்கள் Aggressive முதலீட்டுத் திட்டத்தினைத் தெரிவு செய்திருப்பின், உங்களது பணம் முதல் 13 வருடங்களுக்கு Growth நிதியத்திலும், அடுத்த நான்கு வருடங்களுக்கு Balanced நிதியத்திலும், இறுதி மூன்று வருடங்களுக்கு Secure நிதியத்திலும் முதலீடு செய்யப்படும்.*

எந்நேரத்திலும், ஓர் காப்புறுதி ஆண்டில் ஆகக் கூடுதலாக இரண்டு தடவைகள் நீங்கள் தெரிவுசெய்த முதலீட்டுத் திட்டத்தினை மாற்றும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

காப்புறுதித் தவணை, முதலீட்டு இடர்நிலை (Risk appetite) என்பனவற்றின் அடிப்படையில் உங்களது பணத்தை எவ்வாறு முதலீடு செய்வது என்பதை நீங்கள் தீர்மானிக்க உதவும் வகையிலேயே முதலீட்டுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நீங்கள் விரும்பியவாறு முதலீட்டு நிதியங்களைத் தெரிவு செய்யவோ அல்லது நீங்கள் Advanced முதலீட்டுத் திட்டத்தினைத் தெரிவு செய்யவோ முடியும். இதன் மூலம் உங்கள் கட்டுப்பணம் எவ்வாறு முதலீடு செய்யப்படும் அல்லது Secure, Balanced, Growth எனும் 3 நிதியங்களிடையே எவ்வாறு நிதி மாற்றத்தினை மேற்கொள்ளலாம் என்பதினை நீங்களே தீர்மானிக்கலாம்.

## முதலீட்டுடன் தொடர்புடைய நிதியங்கள்

| Secure நிதியம் | Balanced நிதியம் | Growth நிதியம் |
|---|---|---|
| சமவுரிமைப் பங்குகளைவிட கடன் பிணைகளில் உயர் விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டிருப்பதனால் அதிகளவான மீளப்பெறலை வழங்குகிறது. | கடன், சமவுரிமைப் பங்குகள் ஆகிய இரண்டிலும் முதலீடானது, இடருக்கும் மீளப் பெறலுக்குமான சமநிலையை வழங்குகின்றது. | சமவுரிமைப் பங்குகளின் சந்தையில் உயர்வான விகிதத்தில் முதலீடு செய்வதன் மூலம் உயர் மூலதன வளர்ச்சி. பங்குகளில் முதலிடுதல் உயர் அபாய முதலீடு என வழமையாகக் கருதப்படுகின்றது. |
| | அமைப்புக்கூறு | |
| கடன் பிணைகள் 40-100%<br>சமவுரிமைப் பங்குகள் 0-20%<br>பணச்சந்தை மற்றும் பணம் 0-40% | கடன் பிணைகள் 10-90%<br>சமவுரிமைப் பங்குகள் 10-60%<br>பணச்சந்தை மற்றும் பணம் 0-30% | கடன் பிணைகள் 0-50%<br>சமவுரிமைப் பங்குகள் 20-100%<br>பணச்சந்தை மற்றும் பணம் 0-30% |

## அலகுவிலை வளர்ச்சி*

| நிதியம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| Secure | 14% | 6% | 9% | 11% | 8% | 6% |
| Balanced | 46% | -4% | 8% | 10% | 12% | 2% |
| Growth | 86% | -12% | 6% | 7% | 18% | -4% |

* கடந்தகால செயற்பாடுகள் எதிர்கால மீள்கொடுப்பனவுகளைக் குறிப்பனவாக அமையாது என்பதனை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

## உங்கள் சேமிப்பு நிதியம் எவ்வாறு வளர்ச்சியடைகின்றது?

நீங்கள் 30 வயதுடையவராக இருந்து, 2016 ஆம் ஆண்டில் 15 வருட திட்டத்தைத் தெரிவு செய்திருந்தால், உங்கள் உத்தேச சேமிப்பு நிதியப் பெறுமதி பின்வரும் முறையில் அமைந்திருக்கும்.

| வருடாந்த அடிப்படை கட்டுப்பணம் | உத்தேச முதலீட்டு மீள்கொடுப்பனவு** | | |
|---|---|---|---|
| | 4% ஆண்டு | 8% ஆண்டு | 12% ஆண்டு |
| 100,000 | 2,452,251 | 3,267,483 | 4,409,409 |
| 200,000 | 4,935,374 | 6,575,450 | 8,872,728 |

*இலங்கை ரூபாவில்*

**எடுத்துக்காட்டுக்காகவே இந்த உத்தேச பெறுமதி பெறுமானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் 5% பணவீக்க பாதுகாப்பின் அடிப்படையில் இவை கணிக்கப்பட்டுள்ளன. காப்புறுதிக் கட்டுப்பணங்கள் Aggressive முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதல் வருடக் கட்டுப்பணப் பெறுமதியின் இருமடங்கு ஆயுள் காப்பீட்டுடன் முதலிடப்பட்டுள்ளது.

முதலீட்டுச் செயற்பாடு மற்றும் ஒவ்வொரு நிதியத்திற்கும் பொருத்தமான கட்டணங்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே உண்மையான நிதியத்தின் பெறுமதி அமைந்திருக்கும்.

இந்த வருமான விகிதங்கள் உத்தரவாதமளிக்கப்பட்டவையல்ல. நீங்கள் பெறக்கூடிய தொகையின் உச்ச மட்டத்தையோ அல்லது குறைந்த மட்டத்தையோ காண்பிக்கவில்லை.

முதிர்வின் போது காப்புறுதித்திட்டப் பெறுமதி, சேமிப்பு நிதியத்தின் மொத்தத் தொகையாக இருக்கும். முதிர்வின் போது ஆயுள் காப்புறுதி முடிவுக்கு வருகின்ற போதிலும், முதிர்வுத் திகதிக்கு அப்பாலும் உங்கள் சேமிப்புக்களை வைத்திருப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

## உங்களது சேமிப்புத் திட்டத்தின் மேலதிக அனுகூலங்கள்

### பணவீக்கப் பாதுகாப்பு

உங்களது சேமிப்பு நிதியப் பெறுமதியை பணவீக்கத்தில் இருந்து பாதுகாக்கவென இது உருவாக்கப்பட்டுள்ளது.

காப்புறுதித்திட்ட ஆரம்பத்தில் பணவீக்கப் பாதுகாப்பு 5% மாக அமைந்துள்ளதனால், உங்களது அடிப்படை வருடாந்த கட்டுப்பணம் மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பிற்கான வருடாந்தக் கட்டுப்பணம் என்பன வருடாந்தம் 5% தினால் அதிகரிக்கும். இரண்டாம் வருடத்தில் இருந்து பணவீக்கப் பாதுகாப்பு தொடர்ந்தும் 5% மாக இருக்கும் அல்லது வருடாந்த பணவீக்க வீதத்தை அடுத்த காப்புறுதி வருடத்திலிருந்து 0%, 10% அல்லது 15% ஆக மாற்றலாம்.

### கட்டுப்பணத்திற்கு மேலதிகமான செலுத்துகை

காப்புறுதித் தவணைக்காலத்தினுள் உங்களது வழமையான கட்டுப்பணத் தொகைக்கு மேலதிகமான நிதியைச் செலுத்தி உங்கள் சேமிப்பு நிதியப் பெறுமதியை அதிகரிக்கலாம். எந்த நேரத்திலும் இதனை செலுத்தலாம். ஆனால், இந்த தொகை ரூபா 60,000/- க்கு குறைவாக இருக்கக் கூடாது.

## உங்களுக்குப் பொருத்தமான ஆயுள் காப்புறுதி

AIA SavingsPlan திட்டமானது உங்களது ஆரம்ப வருடாந்தக் கட்டுப்பணத் தொகையின் 2-15 மடங்கு வரை பெறுமதியுடைய ஆயுள் காப்பீட்டை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, சிறியதொரு தொகையைச் செலுத்துவதன் மூலம் இவ்வாயுள் காப்பீட்டை மேலும் அதிகரிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

## எதிர்பாராத சம்பவம் நிகழுமானால்

எதிர்பாராத வகையில் உங்களது மரணம் ஏற்படுமானால் உங்கள் வாழ்க்கைத்துணை அல்லது உங்களில் தங்கியிருப்பவர்கள், காப்புறுதித் தொகை அல்லது நிதிய பெறுமதியில் எது கூடியதோ அந்தத் தொகையுடன், கோரப்பட்ட மேலதிக அனுகூலங்களையும் பெறுவார்கள்.

## மேலதிக காப்புறுதித்திட்ட விபரங்கள்

- நுழைவு வயது: 18-60 வயது. முதிர்வு வயது 70 வருடங்களுக்கு மேற்படலாகாது.
- காப்புறுதிக் காலவரை: 10-30 வருடங்கள்
- அடிப்படைக் கட்டுப்பண ஒதுக்கீடு:

| காப்புறுதி வருடம் | 1ஆம் | 2ஆம் | 3ஆம் | 4லிருந்து 5 வரை | 6 தொடக்கம் |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீட்டு வீதம் | 45% | 75% | 85% | 95% | 99% |

- உங்கள் கட்டணங்களை மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு அல்லது ஒரு வருடத்துக்குச் செலுத்த முடியும்.

## இத்திட்டமானது செயலிழப்பின் யாது நிகழும்?

முதல் 3 காப்புறுதி வருடங்களில், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 நாள் சலுகைக் காலத்தினுள் உங்களது கட்டுப்பணத் தொகையை நீங்கள் செலுத்தாவிடின் இத்திட்டம் செயலிழப்பதுடன், ஆயுள் காப்புறுதியின் கீழ் எந்தவொரு அனுகூலத்தினையும் நீங்கள் பெறமுடியாது. எவ்வாறாயினும், காப்புறுதி நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் காப்புறுதியை மீள் செயற்படுத்தும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது.

3 வருடங்களுக்கு அல்லது அதற்குக் கூடிய காலத்திற்கு நீங்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தி காப்புறுதித் திட்டத்தைத் தொடர்ந்திருந்தால், தேவையேற்படும் பட்சத்தில், உங்கள் காப்புறுதித் திட்டத்தை கையளிப்புச் செய்து அதற்கான ரொக்கப்பணத்தைப் பெறமுடியும். இவ்வாறு செய்வதன் மூலம் பெருமளவு அபராதத் தொகையைச் செலுத்த நேரிடும்.

பதிலாக ஆயுள் காப்பீடின்றி உங்கள் நிதியம் வளர்வதற்கு இடமளிக்கின்றது.

## ஆயுள் காப்புறுதி அனுகூலங்கள்

### மேலதிக ஆயுள் காப்புறுதி அனுகூலம்

சிறியதொரு தொகையைச் செலுத்துவதன் மூலம் நீங்கள் உங்களுடைய அடிப்படை ஆயுள் காப்பீட்டுத் தொகையை அதிகரிக்கலாம்.

## விபத்து அனுகூலம்
விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு மேலதிக ஆயுள் காப்புறுதி வழங்கப்படுகிறது. நிரந்தர அங்கவீனம் ஏற்படும் சமயத்திலும் நிதியுதவியினைப் பெறமுடியும். (அங்கவீனத்தின் தன்மையின் அடிப்படையில் இந்தத் தொகை தீர்மானிக்கப்படும்.)

## வைத்தியசாலை வருமான அனுகூலம்
வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்கள் கடந்த நிலையில் முதல் நாளிலிருந்து தினமும் ரூபா 8,000/- வரை நாளாந்த ரொக்கப்பண அனுகூலம் வழங்கப்படுகிறது. தீவிர சிகிச்சைப் பிரிவில் நீங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால், இத்தொகை இரு மடங்காகும். இவ்வனுகூலம் உங்களது வாழ்க்கைத்துணைக்கும் பிள்ளைகளுக்கும் தொடரப்படலாம்.

## பராயமடைந்தோருக்கான சத்திர சிகிச்சை அனுகூலம்
உங்களுக்கோ அல்லது உங்கள் வாழ்க்கைத்துணைக்கோ அட்டவணைப்படுத்தப்பட்ட 250 சத்திர சிகிச்சைகள் இலங்கை, இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நிதியுதவி வழங்கப்படும்.

## பாரதூரமான நோய்களுக்கான காப்பீட்டு அனுகூலம்
உங்களுக்கு அல்லது வாழ்க்கைத்துணைக்கு பாரதூரமான நோய் ஏற்படும் பட்சத்தில் அதற்கான நிதியுதவி வழங்கப்படும். ஆகக்கூடுதல் தொகையாக ரூபா 1.5 மில்லியன் வரை காப்பீட்டைத் தெரிவுசெய்யலாம்.

## கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்
முழு அளவிலான நிரந்தர அங்கவீனம் ஏற்படுமிடத்து, கட்டுப்பணக் கொடுப்பனவுகள் விலக்கப்படும். இருந்த போதிலும், உங்களது காப்புறுதி மூலம் உறுதியளிக்கப்பட்ட சகலவித அனுகூலங்களையும் நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள்.

## வருமான பாதுகாப்பு அனுகூலம்
கட்டுப்பணம் செலுத்தும் காலத்தில் எதிர்பாராத விதமாக உங்களது மரணம் அல்லது முழு அளவிலான நிரந்தர அங்கவீனம் ஏற்படின், ஆகக்கூடுதலான 10 வருடங்களுக்கு உங்களில் தங்கியிருப்பவர்களுக்கு மாதாந்த வருமானம் வழங்கப்படும்.

## வாழ்க்கைத்துணைக்கான ஆயுள் காப்புறுதி
உங்களது காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் உங்களது வாழ்க்கைத்துணைக்கும் ஆயுள் காப்புறுதி வழங்கப்படும்.

## சைல்ட்ஹெல்த்கெயர் அனுகூலம்
அட்டவணைப்படுத்தப்பட்ட 250 சத்திர சிகிச்சைகள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டால், நிதியுதவி வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுமிடத்து ரொக்கப்பணமும், 12 வயதுக்குட்பட்ட சிறுவருடன் பெற்றோரில் ஒருவர் தங்கியிருப்பின் விசேட கொடுப்பனவும் வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதிதாரர் காப்புறுதி உரிமையாளர் அல்லாதவிடத்து, இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்கே உரித்தாகும். எனினும், இவ்வனுகூலங்களுக்கான காப்பீடுகள் காப்புறுதிதாரருக்கானவை.

முழுமையான விபரங்களுக்கு தயவுசெய்து ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

இந்தப் காப்புறுதித் திட்டத்தில் நிறுவனமானது நிதியையோ மற்றும் / அல்லது சேமிப்பு அனுகூலத்தையோ திருப்பித் தருவதை உத்தரவாதனளிக்காது. அத்துடன் இவ்வகையான திருப்பிவிடப்படுகின்ற நிதி மற்றும் / சேமிப்பு அனுகூலம் சேமிப்பு அபாயமாக கருதப்படுகின்றது (குறிப்பிட்ட சொத்தின் சந்தை விலையின் ஏற்ற இறக்கங்கள்) அத்துடன் அவ்வகையான முதலீட்டு அபாயமானது காப்புறுதித் திட்ட உரிமையாளரினால் குறைக்கப்படக் கூடியதாகவிருக்கும்.

SP - 300000182
V4 - 05/18

# AIA பற்றி

AIA குழுமம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முன்னணி ஆயுள் காப்புறுதி வழங்குநர் ஆகும்.



1919
சீனா

1931
ஹொங்கொங்

1931
சிங்கப்பூர்

1938
தாய்லாந்து

1947
பிலிப்பீன்ஸ்

1948
மலேசியா

1957
புருணே

1972
அவுஸ்திரேலியா

1981
நியூஸிலாந்து

1982
மக்காவு

1984
இந்தோனேசியா

1987
கொரியா

1990
தாய்வான்

2000
வியட்னாம்

2001
இந்தியா

2012
இலங்கை

2013
மியன்மார்*

2015
கம்போடியா

*AIA மியன்மாரிலும் பிரதிநிதித்துவ அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

**US$1 டிரில்லியனுக்கும்**
அதிகமான காப்பீட்டுத் தொகை

ஆசிய வரலாற்றில்
**100 ஆண்டுகளுக்கு அண்மித்த**
அனுபவம்

**உலகளாவிய 18 சந்தைகள்**

**30 மில்லியனுக்கும்**
அதிகமான தனிப்பட்ட காப்புறுதிகள்

**16 மில்லியனுக்கும்**
அதிகமான குழுமக் காப்புறுதி அங்கத்தவர்கள்

AIA Insurance Lanka PLC (Co.No.PQ 18) இனால் வெளியிடப்பட்டது. 05/2018

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA இன்ஷுவரன்ஸ் லங்கா PLC
(Co.No.PQ 18)
AIA டவர், 92, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி: 011 2310310
தொலைநகல்: 011 4715892
மின்னஞ்சல்: lk.info@aia.com